# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

அ.வ.எண். 163/2019 தேதி-23.10.2024

(P.W.1) -ராபின்சன்

குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு ஏ-பட்டிகை சொத்து பி-பட்டிகை சொத்திற்கு 15 அடி தாழ்த்தி வயல் வெளியாக உள்ளது என்றால் சரிதான். ஏ-பட்டிகை சொத்து தற்போது என் வசம் இல்லை என்றாலும் அதை கிரயம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். 06.01.2022 அன்று ஷீபா என்பவருக்கு வழக்கு ஏ-பட்டிகை சொத்தை கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண் 55/9 என்றால் சர்வே எண் 55/9 மற்றும் 56/11 ஆகிய இரண்டு சொத்தையும் கிரயம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.8 ஆவணத்தில் குளம் மற்றும் அதனுடைய கரை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் வழக்கின் பி-பட்டிகை சொத்திற்கு வேலி போட வந்ததை தடுத்தபோது எடுத்த புகைப்படத்தை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அதற்கான ரீ-சர்வே எண் 55/2 என்றால் சரிதான். மேற்சொன்ன ரீ-சர்வே எண் 55/2 பிரதிவாதிக்கு 1986-இல் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )